DINAMALAR 09 AUG 09



கோவை, வெள்ளியங்கிரி ஈசா யோக மையம் சார்பில் ஆர்.எஸ்.புரம்., திருவேங்கடசாமி ரோட்டில் நேற்று 'ஈஷானா' கைவினைப்பொருட்கள் மற்றும் புத்தக விற்பனை மையம் திறக்கப்பட்டது.

# 'ஈஷானா' ஷோரூம் கோவையில் திறப்பு

**கோவை, ஆக. 9-**

ஈஷா யோக மையத்தின் சார்பில், 'ஈஷானா' புத்தகம் மற்றும் கைவினைப்பொருட்கள் விற்பனை நிலைய திறப்பு விழா ஆர்.எஸ்.புரத்தில் நடந்தது.

ஈஷா யோக மையத்தின் சார்பில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கிராமப்புற வேலைவாய்ப்பை அதிகரிக்கும் பொருட்டு, கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையத்தின் விரிவுபடுத்தப்பட்ட கட்டட திறப்பு விழா, கோவை ஆர்.எஸ்.புரம், திருவேங்கடசாமி ரோட்டில்(கிழக்கு) நடந்தது.

மாநகராட்சி தெற்கு மண்டல தலைவர் பைந்தமிழ்பாரி திறந்து வைத்தார்.

ஷோரூமில் ஈஷா யோக மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவின் புத்தகங்கள், 'சிடி' 'டிவிடி'கள், கிராமப்புற கைவினைபொருட்கள், வீட்டு உபயோகப்பொருட்கள், உணவு பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.